# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 138/2012** **Date:02.03.2026.**

**(DW3)-** ராஜசேகர்

**1,2** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் எந்த பிரதிவாதிக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் செல்வராஜ் மற்றும் சுப்பிரமணிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கை வாதி எந்த பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது ஊரில் கலவரம் வரவேண்டும் என்றும் ஊர் கோவிலை அபகரிக்கவேண்டும் என்றும் தாக்கல் செய்துள்ளார், இலஞ்சிவிளை, செருப்பன்கோடு, பண்டாரவிளை ஆகிய ஊர்களை நங்கண்விளை என்று அறிவிக்க வேண்டி தாக்கல் செய்துள்ளார். செருப்பங்கோடு ஊரில் நான் எத்தனை வருடமாக குடியிருந்து வருகிறேன் என்றால் 50 வருடங்களாக குடியிருந்து வருகிறேன்.

2. நான் குறிப்பிட்டுள்ள இரண்டைகரை கால்வாய் எந்த இரண்டு ஊர்களை பிரிக்கிறது என்றால் செருப்பங்கோடு ஊரை இரண்டாக பிரிக்கிறது மேற்படி சானல் பேச்சிபாறை அனையில் இருந்து வில்லுகுறி வழியாக குருந்தன்கோடு சென்று அடைகிறது. மேற்படி கால்வாய் எந்த வருடம் வெட்டப்பட்டது என்றால் சுமார் 120 வருடங்களுக்கு முன்னர் வெட்டப்பட்டது. அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் என்து முன்னோர்கள் கூற தான் தெரியும் என்றால் சரிதான். நான் எதன் அடிப்படையில் மேற்படி சானலுக்கு மேற்கே உள்ள பகுதி செருப்பங்கோடு மேற்கு என்றும் கிழக்கு பக்கம் உள்ள பகுதி செருப்பங்கோடு என்று அழைக்கிறேன் என்றால் ஆவணங்கள் அடிப்படையில் குறிப்பிடுகிறேன்.

3. செருப்பங்கோடு என்ற ஊர் எனது ஊரின் குக் கிராமப்பட்டியலில் உள்ளது என்பதை காட்ட நான் ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதி செருப்பங்கோடு மேற்கு பகுதி மக்களை வழக்கில் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன், மேற்படி ஊர் மக்களை சேர்ப்பதற்கு நான் ஏதேனும் நடவடிக்கை

எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை. ஒரு ஊரின் பெயரை மாற்றுவதோ அல்லது குக் கிராம பட்டியலில் சேர்ப்பதற்கோ மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் சட்டத்திற்கு உட்பட்டு அரசின் கொள்கை முடிவு படி மாற்றப்படும் என்றால் சரிதான்.

4. நான் எனது ஊரின் பெயரை மாற்ற வேண்டும் என்று இவ்வழக்கில் எதிர்கோருரிமை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எந்த எதிர்கோருரிமை கோராத பட்சத்தில் நான் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள எந்த வித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**